O.S.No.310/2013 – 4.3.2024

DW1 – கந்தசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி ராமசாமி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கின் சங்கதிகள் அனைத்தும் தெரியுமா என்றால் தெரியும். 6 முதல் 9 பிரதிவாதிகளாகிய நாங்கள் முத்து என்ற பெரியாகவுண்டரின் வாரிசுகள் என்றால் சரி. நான் இந்த வழக்கில் 6–ம் பிரதிவாதி என்றால் சரி. 7 முதல் 9 பிரதிவாதிகளுக்காகவும் நான் இந்த பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. இந்த தாவா சொத்தை 10.08.1960ல் செங்கோட கவுண்டர், முத்து என்கிற பெரியாகவுண்டர், நல்லாகவுண்டர் மற்றொரு செங்கோட கவுண்டர் ஆகியோர் தனித்தனியே பணம் போட்டு கூட்டாக கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரி. முத்து என்கிற பெரியாகவுண்டர் என் தந்தை வழி தாத்தா என்றால் சரி. முத்து என்கிற பெரியாகவுண்டருக்கு செங்கோட்டுவேல் மற்றும் ராமசாமி ஆகியோர் ஆண் வாரிசுகள் என்றால் சரி. செங்கோட்டுவேலின் வாரிசுகள் நானும், 7ம் பிரதிவாதியும் என்றால் சரி. ராமசாமியின்

வாரிசுகள் 8ம் பிரதிவாதி மற்றும் 9ம் பிரதிவாதி என்றால் சரி. தாவா சொத்து இதுவரை எழுத்து மூலமாக பாகம் பிரியவில்லை என்றால் சரி. தாவா சொத்துகள் பூர்வீக சொத்து இல்லை என்றும், 1960ல் கிரயம் பெற்றவர்கள் தனித்தனியே பணம் போட்டு கூட்டாக கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வாதி கோரி உள்ள பரிகாரத்திற்கு ஆட்சேபனையில்லை என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி. வாதி கோரியபடி பரிகாரம் வழங்க எனக்கு ஆட்சேபனையில்லை என்றால் சரி.

13 முதல் 17 பிரதிவாதிகள் மற்றும் 19 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.